கேரளப் பல்கலைக் கழகத்

கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை

(முதல் தொகுதி)

ப.இ
740

பதிப்பாசிரியர்

முனைவர் சு. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை-113.

கேரளப் பல்கலைக் கழகக்

கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை

(முதல் தொகுதி)

PRESENTED FREE OF COST
WITH COMPLIMENTS FROM
THE CENTRAL INSTITUTE OF INDIAN LANGUAGES
GOVERNMENT OF INDIA, MYSORE-570006.

பதிப்பாசிரியர்
முனைவர். சூ. நிர்மலா தேவி

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ.தரமணி
சென்னை-600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Kerala Palkalai Kaḷaka Kīḻticai Cuvaṭikaḷ Viḷakka Aṭṭavaṇai
Author	:	**Dr.S.Nirmala Devi**.M.A.Ph.D; Diploma in Epigraphy and Archaeology; Diploma in Manuscriptology, Research Assistant, I.I.T.S.
Publisher	:	**International Institute of Tamil Studies,** Madras-113.
Publication Number	:	237
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	December 1995
Paper Used	:	16kg Creamwove
Size of the Book	:	14X21cms
Printing types used	:	10 point
Number of copies printed	:	1200
Number of Pages	:	376 + 24
Price	:	**Rs. 85/-**
Binding	:	Paper Pack
Artist	:	Jegan
Subject	:	Descriptive Catalogue of Tamil Manuscripts in Oriental Manuscripts Library, Trivandrum.

232570
17118

வெள்ளி விழா வெளியீடு

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

முனைவர் ச.சு.இராமர் இளங்கோ,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-113.

அணிந்துரை

டாக்டர் உ.வே.சாமிநாதையருக்குப் பின், தமிழ்ச் சுவடிகளைப் படிப்பதிலும், பதிப்பிப்பதிலும் ஒரு தேக்கம் ஏற்பட்டது. இத்தேக்கத்தைப் போக்கும் முயற்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஓராண்டுப் பட்டய சுவடிப் பயிற்சி வகுப்பு நடத்துதல், சுவடிப் பயிலரங்குகள், சுவடிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், வெளிவராத தமிழ்ச்சுவடிகளைப் பதிப்பித்து நூலாக வெளியிடுதல், தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், உலகளாவிய நிலையிலும் உள்ள தமிழ்ச் சுவடிகளுக்குச் சுருக்க, விளக்க அட்டவணைகள் தயாரித்து வெளியிடுதல் என்ற நிலைகளில் இதன் பணி விரிவடைந்து வருகின்றது.

இந்நிலையில், தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளத்தில் பல தமிழ்ச் சுவடிகள் இருப்பதை அறிந்து, முதல் நிலையாகத் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்துக்கு இந் நிறுவனம், முனைவர்.சூ.நிர்மலா தேவி அவர்களை அனுப்பியது.

இவர் அங்குள்ள 3500-க்கு மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளைப் பார்வையிட்டு, 1091 தமிழ்ச்சுவடிகளுக்குச் சுருக்க அட்டவணை ஒன்று தயாரித்தளித்தார். சுவடித் தலைப்பு, சுவடி எண், இதழ் எண்ணிக்கை, அளவு, நிலை, செய்யுள் எண்ணிக்கை, பொருள் என்ற குறிப்புகளை உள்ளடக்கிய இச்சுருக்க அட்டவணையை, இந்நிறுவனம், ''தமிழ்ச் சுவடிகள்(அட்டவணை)'' என்ற பெயரில் செப்டம்பர்.1980-இல் நூலாக வெளியிட்டது.

இதன்பின் அங்குள்ள தமிழ்ச்சுவடிகளுக்கு ஒரு சுருக்க அட்டவணையை (சுவடித் தலைப்பு, பொருள், சுவடி எண்- உள்ளடக்கியதாக) ''தமிழ்ச் சுவடிப் பெயர்கள்'' என்ற நூலாகக்

(பதிப்பாசிரியர்.டாக்டர்.டி.பாஸ்கரன்) கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம் வெளியிட்டது.

தற்பொழுது முன்னர் வெளியிட்ட ''தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை)'' என்ற நூலில் அடங்கியுள்ள 1091 தமிழ்ச் சுவடிகள் நீங்கலாக உள்ள பிற 480 சுவடிகளுக்கான விளக்க அட்டவணை நூலாக வெளிவருகின்றது.

1980 முதல் 1984-வரை முனைவர் சூ.நிர்மலா தேவி அவர்களால் தயாரிக்கப்பட்ட இவ்விளக்க அட்டவணை, பல்வேறு காரணங்களால் தடைப்பட்டு, தற்பொழுது நூலாக வெளிவருவதில் இந்நிறுவனம் பெருமகிழ்வு அடைகின்றது.

சுவடித் தலைப்பு, பொருள், அளவு, நிலை, இதழ் எண்ணிக்கை, செய்யுள் எண்ணிக்கை, குறிப்பு, தொடக்கம், முடிவு என்ற நிலைகளில் விளக்கமுற அமைந்துள்ள இவ்வட்டவணை தமிழுலகுக்குப் பல புதிய செய்திகளைத் தரும் என நம்புகிறேன்.

குழுவாக அமைந்துள்ளோர்களால் பல சுவடி விளக்க அட்டவணைகள் வெளி வந்துள்ளன. தனியொருவராக இருந்து தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை தயாரித்த முனைவர். சூ.நிர்மலாதேவி அவர்கள் பாராட்டுதற்குரியவர். தமிழ்ச் சுவடிகளில் முழு ஈடுபாடு கொண்டுள்ள இவர், கதைப்பாடற் சுவடித் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றவர். சுவடிப்பதிப்புகளிலும் ஈடுபட்டு ''பணவிடு தூது'', ''கருவூரார் பல திரட்டு'', ''The wandering Voice'', ''The Dateless Muse'',""The unsung Melodies'', ''முத்தாரம்மன் கதை'' என்ற நூல்களையும் வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சுவடிகளில் இத்தகு ஈடுபாடு கொண்டுள்ள இவர் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

வெளிவரும் இம் முதற் தொகுதியைத் தொடர்ந்து, கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் அனைத்துக்கும் விளக்க அட்டவணைகள் விரைவில் வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடித் துறையில் முத்திரை பொறித்த இவ்விளக்க அட்டவணைப் பதிப்பாசிரியர் நிர்மலா தேவி அவர்கள் ஆன்ற, அகன்ற, ஆழமான புலமை கொண்டவர். இது போன்ற பல

நூல்களை இவர் வெளியிட்டு, தமிழுக்கும், நிறுவனத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் அளிக்கின்ற மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் திறம்பட, நன்முறையில் அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

இந்நூல் எமது நிறுவன வெள்ளி விழா வெளியீடாக வருவதில் பெருமகிழ்வடைகிறேன்.

ச.சு.இராமர் இளங்கோ

இயக்குநர்